**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

<u>14.08.2025</u>

<u>O.S. No. 62/2022</u>

P.W. 2 திரு. பிரேம் செல்வசிங்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) -</u>**

நான் சாட்சி சொல்ல வந்திருக்கும் வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பி.ஆர். கார்டன் என்ற பெயரில் அமைந்துள்ளதா என்றால் இல்லை. நான் வாங்கியிருக்கும் நிலமும் பி.ஆர். கார்டனில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்து எனக்கு முதன் முதலாக எப்போது தொிய வந்தது என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு குறித்து எனக்கு யார் மூலமாக தொிய வந்தது என்றால் Professor ஜெகன் மூலமாக தொிய வந்தது. அவர் இந்த வழக்கில் வாதி. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தின் சர்வே எண் தொியுமா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தொியுமா என்றால் தெரியும், 5.275 சென்ட். வழக்கின் வாதி எந்த ஆண்டு, எந்த மாதம் ஒப்பந்தம் போட்டார் என்றால் 19.04.2018 அன்று போட்டார். எவ்வளவு தொகை முன்பணம் கொடுத்தார் என்று தொியுமா என்றால் ரூபாய் 4,00,000/- கொடுத்தார். மீதித் தொகை எவ்வளவு என்றும் எவ்வளவு நாட்களில் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தொியுமா என்றால் ஒரு சென்றுக்கு ரூபாய் 2,60,000/- வீதம் கணக்கிட்டு மீதித் தொகை கொடுக்க வேண்டும். சொத்தை 6

மாதத்திற்குள் வரைமுறைப்படுத்தி விடுவோம் என்றும், வரைமுறைப்படுத்திய பின்பு மீதித் தொகை செலுத்த வேண்டும் என்றும் பிரதிவாதிகள் சொன்னார்கள். யாரிடம் எப்போது அவ்வாறு சொன்னார்கள் என்றால் பிரதிவாதிகள் என்னிடமும், ஜெகனிடமும் சொன்னார்கள். 17.04.2018 அன்று வாதி பணம் அனுப்பும்போது சொன்னார்கள். வரைமுறைப்படுத்துவது என நான் சொல்வது எதை என்றால் Layout Approval ஐ சொல்கிறேன். இந்த வழக்கின் சொத்திற்கு Layout Approval இதுவரை கிடைக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அட்வான்ஸ் தொகை கொடுத்த பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரையில் வாதி வேறு எந்த தொகையும் பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளுக்கு எழுத்துபூர்வமாக பாக்கி தொகை உள்ளது வாங்கிக் கொள்ளுங்கள் என கூறி அறிவிப்பு எதுவும் அனுப்பினாரா என்றால் அது குறித்து எனக்கு தொியாது. வழக்கின் பிரதிவாதிகள் மீது வடசேரி காவல் நிலையத்தில் ஒரு புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சொத்து எழுதி தராததால் புகார் அளித்தேன். போலீசார் அதன் அடிப்படையில் எங்கள் இரு தரப்பினரையும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் அந்த சொத்தில் வீடு கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். எத்தனை சதுர அடி வீடு என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. தோராயமாக 2000 சதுர அடிக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு Approval இல்லாமல் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பஞ்சாயத்து Approval உள்ளது. எப்போது வாங்கப்பட்டது என்றால் தேதி வருடம் ஞாபகம் இல்லை. என்னுடைய நிலத்திற்கும் Layout Approval கிடையாது என்றால்

சரியல்ல, நான் நிலத்தை வாங்கியபிறகு Approval வாங்கியுள்ளேன். நான் சொல்வது போல என் நிலத்திற்கு Approval கிடையாது என்றாலும் பிரதிவாதிகளுக்கு எதிராக இருந்த முன்விரோதம் காரணமாக போலீசில் புகார் கொடுத்திருந்தேன் என்றாலும் அதன்பேரில் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பாதிக்கப்பட்டுள்ளேன் அதனால் சாட்சியம் அளிக்கிறேன். எனது மகளின் பெயரில் கிரய ஒப்பந்தம் செய்து என் பெயரில் பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் பெற்றேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. கிட்டதட்ட ரூபாய் 24,00,000/- இருக்கும். அது விஸ்தீரணம் என்ன என்றால் 4 சென்ட் ஆகும். நான் இந்த வழக்கிற்கு தேவையில்லாத சாட்சி என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.